குறிப்பிட்டார்கள். ஆனால் நான்கு நாட்களுக்குப் பிறகு இன்று கல்வியமைச்சர் அவர்கள் 75 லட்சம் ரூபாய அதனால் நஷ்டமும், செலவும் ஆகும் என்று சொன்னார்கள். ஒரு வாரத்திற்குள்ளேயே 20 லட்சம் அதிகமாகச் சொல்கிறார்கள். அவர் சொன்னது சரியா அல்லது ஐயா அவர்கள் சொல்வது சரியா என்று யோசித்துச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : ஐம்பத்தைந்து லட்ச ரூபாயிலிருந்து 75 லட்ச ரூபாய் வரையில் ஆகும் என்று சொல்லப்படுகிறது. உத்தேசமாகத்தான் போடப்படும். அதைப் பற்றி நான் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. ஐம்பத்தைந்து லட்சத்திலிருந்து, 75 லட்சத்திற்கு வரக்கூடும். நான் புதிதாக வருகின்ற எண்ணிக்கையையும் சேர்த்துச் சொன்னேன். அவர்கள் சொல்லும்பொழுது அதைச் சேர்க்காமல் சொன்னார்கள்.

திரு. வெ. முனுசாமி : சம்பளச் சலுகை, ஸ்காலர்ஷிப் இவற்றிற்காக வருட வருமானம் 1,500-க்கு குறைந்திருக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அதிலே குமாஸ்தாக்கள் வாங்கக்கூடிய பஞ்சப்படி போன்றவற்றையும் சேர்த்துக்கொள்கிறார்கள். அதனால் அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்கவில்லை. ஆகவே பஞ்சப்படி போன்றவற்றைக் கழித்து அவர்களுக்குச சலுகை கொடுக்க முன் வருவார்களா ?

(பதில் இல்லை.)

திரு. கே. ஆர். கோவிந்தன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, கொடுக்கப்படும் சலுகைகள் இன அடிப்படையை வைத்துக் கொடுக்காமல் ஏழ்மையின் அடிப்படையில் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

(பதில் இல்லை.)

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கல்விச் சலுகைகளிலே தொழிலாளர்களுடைய சம்பளத்தையும், போனஸையும் ஓட்டுமொத்தமாகக் கணக்கிட்டுக்கொள்வதால் அவர்களுக்கு சலுகைகள் கிடைக்கவில்லை. இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்கும் சலுகைகள் கிடைப்பதற்கு சர்க்கார் முயற்சியெடுக்குமா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிக்கேள்வி போட வேண்டும்.

உறுப்பினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதி

* 8 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு இந்தியா பூராவும் 1-வது வகுப்பில் ரயிலில் பிரயாணம் செய்ய அனுமதிப்பது போல் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தமிழ்நாடு பூராவும் ரயிலில் போக அனுமதிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

* 9 கேள்வி.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாடு பூராவும் ஓடும் சர்க்கார் பஸ்களில் சட்டசபை அங்கத்தினர்கள் கட்டணமின்றி பிரயாணம் செய்ய அனுமதிக்கும் உத்தேசமுண்டா?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: அத்தகைய செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

Arts College in Tiruttani

* 10 Q.—THIRU. K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an Arts College in Tiruttani Taluk, Chingleput district from the next academic year 1967–68?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the fact that there are about 30 high schools in the Tiruttani taluk and about 30,000 students are coming out of those schools successfully after passing the S.S.L.C. Examination every year and in view of the fact that most of them migrate to the Andhra University because they are denied seats in the Madras City Colleges, will the Government consider the possibility of opening an Arts College there provided the Devasthanam of the Tiruttani Temple or the public come forward to contribute money for the starting of the college?

மதிப்பிற்குரிய திரு. இரா. நெடுஞ்செழியன்: திருத்தணிப் பகுதியில் இருந்து ஒரு கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை இது வரை வந்ததாகத் தெரியவில்லை. அங்கு ஒரு கல்லூரியை வைக்க வேண்டுமென்றால் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். கனம் உறுப்பினர் அவர்கள் ஐந்து லட்சம் ரூபாயைச் சேர்த்துத் தருவார்களேயானால் அரசாங்கம் அங்கு ஒரு கல்லூரியை வைக்க முயற்சி எடுக்கும். முறைப்படி அவர்கள் விண்ணப்பத்தைக் கொடுப்பார்களேயானால் கவனிக்கப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புது விடுதி

*11. கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டப்படும் தங்கும் விடுதி எப்போது திறக்கப்படும்?